முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1650

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.04.2024**, வெள்ளிக்கிழமை

1. பரம ஆனந்த ஞான சொரூபத்தின்
   பால தண்டாயுதப் பெருமானின் என் அவதாரம்
   வரமாகப் பெற்று வந்த வள்ளலே
   வாழுகின்ற ஞானியே அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   வரமாக சோபகிருது சேல் திங்களில்
   வழங்குவேன் அரங்கனுக்கு இன்னும் சக்தி கூடிட
3. சக்தி கூட அரங்கனோடு யானிருந்து
   சர்வகாலமும் மகா சூட்சும பலம் அருளிவர
   பக்தியோடு அரங்கன் தொடர்பு கூட்டி
   பாருலகில் ஓங்காரக்குடில் நோக்கி
4. சித்தி வேண்டி உலகோர் தொடர்ந்து வந்தால்
   செப்பிடுவேன் சுப்ரமணியர் என் அருட்காட்சி ஞானமோடு அரங்கன் வகுத்த
   மாதர்ம வழி முறைகளோடு மண்ணுலகோர் இனி பிறவாத பேற்றுக்கு
   மகாவரம் பெற்று சிறக்க நேரும்
5. நேர்மைபட அரங்கன் கொள்கை ஏற்று
   நிலவுலகில் ஞானிகளை பூஜிக்கும்
   வரம்தனை உலகோர்க்கு வழிகாட்டலாக
   வழிமொழிந்து அரங்கன் வழி உலகோர்
6. உலகோர் மகத்துவத்தை விளக்கி நின்றால்
   உலகமெங்கும் ஞானிகளாக வெளிப்பாடு
   காலமதில் அரங்கேறி இனிதே
   கலியுகத்தில் ஞானவான்கள் ஆட்சி

7. கந்தவேலன் யான் துவக்குகின்ற விந்தைமிகு
ஞானிகள் ஆட்சியாக விரைந்து
உலகம் கண்டு அற்புதம் அடையக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–